1991 அக்டோபர் 4]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூட, ஒரு மாத காலத்திற்கு முன்னாலே, ஒரு 150 ஏக்கரா இருக்கிற இடத்தைக் குறிப்பிட்டு, வரைபடத்தைக்கூட என்னிடத்திலே காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது 300 ஏக்கர் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இவ்வளவு ஒத்துழைப்பு எல்லா சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலேயும் இருக்கிற காரணத்தினால், அதை விரைவாகப் பரிசீலித்து, நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிகள் மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 152, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

ஆலங்குளத்திலிருந்து சேர்ந்தமரம் வரை நகரப் பேருந்து விடுதல்.

152—

*1369. திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளத்திலிருந்து துத்திகுளம் வழியாக சேர்ந்தமரம் வரை நகரப் பேருந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்று ஒரே வரியில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினை. மக்களுடைய அடிப்படைப் பிரச்சினை. ஆலங்குளத்திலிருந்து துத்திகுளம் வழியாக நான்கைந்து கிராமங்கள் அதாவது கல்லூத்து, சிவலிங்கபுரம் ஆகிய இந்த ஊர்களிலிருந்தெல்லாம் ஆலங்குளம், சுரண்டை, சேர்ந்தமரம் ஆகிய இந்த ஊர்களுக்கு அங்குள்ள மாணவர்கள் பள்ளிக்கு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1991 அக்டோபர் 4

செல்ல வேண்டியிருக்கிறது. அதைப்போல, பொதுமக்கள் அந்த ஊர்களுக்குச் சென்றால்தான் ஏதாவது பொருட்கள் வாங்குவதற்கு வசதியாக இருக்கும். வியாபாரத் தொடர்பு வைப்பதற்கும் வசதியாக இருக்கும் என்பதால், இதை மீண்டும் பரிசீலனை செய்து, அங்கே பஸ்ஸை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துத்திகுளம் என்ற இடத்திற்கு பேருந்துகள் முன்பு ஆறு முறை சென்று வந்தது. டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, அங்கே பாதைகள் சரியில்லை என்ற காரணத்தைக் காட்டி நிறுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், போக்குவரத்துக் கழகங்களுக்கு சில அறிவுரைகள் வழங்கியிருக்கிறார்கள். நிறுத்தப்பட்ட பேருந்துகள் அனைத்தும் வருகின்ற 15-ஆம் தேதியன்று இயக்கப்பட வேண்டுமென்ற உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நிறுத்தப்பட்ட அனைத்துப் பேருந்துகளும், வருகின்ற 15-ஆம் தேதி இயக்கப்படும். உங்களுக்கு ஏதாவது ஒரு இடத்தில் பேருந்துகள் இயக்கப்படவில்லை என்றால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-00

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சி தலைவர் ஆட்சிக் காலத்தில், மிகத் துரிதமாகப் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல, டீசல் தட்டுப்பாட்டிற்குப் பின்னால் பல்வேறு இடங்களிலே நிறுத்தப்பட்ட பஸ்கள் தற்போது இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 15 நாட்களுக்குள்ளாக எல்லா நிறுத்தப்பட்ட பஸ்களும் விடப்படும் என்று சொல்வது உண்மையிலேயே பொதுமக்கள் மிகுந்த வரவேற்பு கொடுக்கக்கூடிய நிகழ்ச்சியாகும். ஆதலால் எங்கள் பகுதியில் பல பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்த பஸ்களையெல்லாம் மீண்டும் இயக்கச் செய்து, பொதுமக்களுடைய இந்த அடிப்படைத் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 15-ஆம் தேதி காலையிலேயிருந்து அத்தனை பேருந்துகளும் இயக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது, பேருந்துகள் இயக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினால், விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 153. திருமதி ரமணி நல்லதம்பி, திரு. க. பழனிசாமி, திருமதி ரெ. சியாமளா, திரு. எஸ். சண்முகநாதன். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

வீட்டு மின் இணைப்பிற்கான வைப்புத் தொகையைக் குறைத்தல்.

*60. திருமதி ரமணி நல்லதம்பி,
திரு. க. பழனிசாமி:
திருமதி ரெ. சியாமளா:
திரு. எஸ். சண்முகநாதன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வீட்டு மின் இணைப்பிற்கு அனுமதி பெறுவதற்கான வைப்புத் தொகை உயர்த்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) அவ்வைப்புத் தொகையைக் குறைக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) வீட்டு மின் இணைப்பிற்கு அனுமதி தருவதற்கான வைப்புத் தொகை உயர்த்தப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் அது 160 ரூபாயாக இருந்தது. கருணாநிதியினுடைய காலத்திலே 360 ரூபாயாக இருந்தது. கவானருடைய ஆட்சிக் காலத்திலே அது 860 ரூபாயாக உயர்த்தப்பட்டு, நாம் வெற்றி பெற்று, பதவிப் பிரமாணம் எடுப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக அது அமலுக்கு வந்திருக்கிறது. இதை அரசு அறியுமா ? இந்த 860 ரூபாயை வைப்புத் தொகையாக வழங்குவதை விட அதை வேறு எங்காவது பேங்கிலே போட்டால் அதற்கு வட்டியே வந்துவிடும். பில் கட்டவேண்டியதே வராது. அந்த அளவுக்கு அந்தத் தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தி